# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

அசல் மனு எண். 054/2016/ ந

ஆணை எண். 160/2016

நாள் : 05/10/2016

**திரு. பி. கண்ணன்,
த/பெ ஏ.வி. பாலசுப்ரமணியன்,
பம்மல்.** – **மனுதாரர்**

**திரு. வெ. ஜெகநாதன்,
த/பெ வெள்ளைச்சாமி,
1–வது வார்டு உறுப்பினர்,
பம்மல் நகராட்சி.** – **எதிர் மனுதாரர்**

## ஆணை

மனுதாரரது 27.01.2016 நாளிட்ட முறையீட்டு மனு 29.01.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.0054/2016 ஆக பதிவுசெய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் பம்மல் நகராட்சி 1–வது வார்டு உறுப்பினர் மீதும் நகராட்சி ஒப்பந்தப் பணிகள் தரமற்று உள்ளதாகவும் தேர்தல் விதிமுறை மீறும் செயல் எனில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வரப்பெற்றுள்ள அறிக்கைகள் ஆவணங்கள், நடத்தப்பட்டுள்ள விசாரணைகள், பெறப்பட்டுள்ள வாக்குமூலங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

2. பம்மல் நகராட்சி 1–வது வார்டு உறுப்பினரான எதிர்மனுதாரர் தனது உடன் பிறந்த சகோதரி திருமதி கவிதா மலர் என்ற பெயரில் நகராட்சி ஒப்பந்த வேலைகளை பெற்று பணிகளை தரமற்று செய்து வருவதாகவும் இது தேர்தல் விதி மீறும் செயல் எனில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரரால் கோரப்பட்டது. மனுதாரர் தான் பம்மல் நகராட்சியிலிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற சில விவரங்களடங்கிய கடித நகல்களையும், 2011 உள்ளாட்சி தேர்தல் வாக்காளர் பட்டியலில் ஒப்பந்ததாரர் திருமதி கவிதா மலர் என்பவரது பெயர் அடங்கிய பக்கத்தின் நகலினையும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் 2014ல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தப்பணி தொடர்பான கல்வெட்டில் மேற்படி ஒப்பந்ததாரரது பெயரது இடம்பெற்றுள்ளது குறித்து புகைப்பட நகலினையும் இணைத்துள்ளார்.

3.இது குறித்து இம்முறைமன்ற நடுவ 09.02.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் பம்மல் நகராட்சி ஆணையரது பதில் அறிக்கை கோரி ஆணையிடப்பட்டது. நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க. எண்.222/16/இ1, நாள் 04.03.2016 வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் பம்மல் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ள திருமதி கே.வி.எஸ். கவிதா மலர் என்பவர் 2008–2009 முதல் திருமதி கவிதா செம்பியன் க/பெ செம்பியன் என்ற பெயரில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்து வருவதாகவும் மேற்படி ஒப்பந்ததாரர் 11.06.2009ல் தமிழ்நாடு அரசிதழில் தனது பெயரினை கே.வி.எஸ். கவிதா மலர் என பெயர் மாற்றம் செய்து நாளது தேதிவரை தொடர்ந்து ஒப்பந்ததாரராக பணி மேற்கொண்டு வருவதாகவும் இதுநாள் வரையில் இவரது பணி தொடர்பாக மனுதாரரது புகார் மனுவினைத் தவிர எந்தவித புகாரும் வரப்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரரது புகார் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட பம்மல் நகராட்சியின் ந.க.எண்.1530/15/இ1, நாள் 16.11.2015லும் திருமதி கே.வி.எஸ்.கவிதாமலர் என்பவரது ஒப்பந்த பதிவு குறித்து மனுதாரருக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இம்முறைமன்ற நடுவ 23.03.2016 நாளிட்ட அழைப்பாணையின்படி மனுதாரர் 21.04.2016 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். அதன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளார். அதில் தனது மனுவில் 2009–10 முதல் கடந்த 3 வருடங்களாக ஒப்பந்தப்பணி செய்து வருவதாக குறிப்பிட்டது தவறு எனவும் எந்தெந்த பணிகள் தரமற்றுள்ளன என்பது குறித்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினரின் சகோதரிக்கு தொடர்புடைய நகராட்சி ஒப்பந்தப் பணிகள் வழுங்கக்கூடாது என்பதற்கான விதிகளோ நீதிமன்ற ஆணைகளோ தன்னிடம் இல்லையென்றும் அவ்வாறிருப்பின் அவற்றையும் அடுத்த விசாரணையில் சமா்ப்பிப்பதாகக் கோரி மனுதாரரால் அவகாசம் வழுங்கக் கோரப்பட்டது.

5. அடுத்த விசாரணை நாள் 10.05.2016 என நிர்ணயித்து விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. மேலும், முறையீட்டு மனுவில் மனுதாரரால் குறிப்பிடப்பட்ட சாட்சிகள் திரு எஸ். கந்தவேல் மற்றும் திரு. ஏ. தினகரன் ஆகியோரையும் விசாரணைக்கு ஆஜர் படுத்துமாறு இம்முறை மன்ற நடுவ 22.04.2016 நாளிட்ட அழைப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. மனுதாரர் 10.05.2016 அன்று ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சங்கர் நகர் காந்தி பிரதான சாலை, சங்கர் நகர் 38 வது தெரு மற்றும் பம்மல் நல்லதம்பி சாலை ஆகியவை பழுதான நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டு புகைப்படங்களும் சமா்ப்பிக்கப்பட்டன. மேலும் திரு தினகரன் என்ற தனது தரப்பிலான சாட்சி ஆர்வமில்லாமல் இருப்பதால் ஆஜர்படுத்த முடியவில்லை எனவும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டது.

6. மேலும் பிறிதொரு புகாராக , வருவாய்த்துறைக்கு சொந்தமான மலைக்குட்டையில் தண்ணீர் திருடி வியாபாரத்திற்கு விற்கப்படுவதாகவும் இதுகுறித்து தாம்பரம் வட்டாட்சியருக்கு மனு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு தண்ணீர் விற்பனை செய்வது எதிர்மனுதாரரான 1–வது வார்டு உறுப்பினர் திரு. ஜெகந்நாதன் எனவும், மேற்படி புகார் மனுவின் நகல் மாவட்ட ஆட்சியர், வருவாய் ஆய்வாளர் மற்றும் டாமின் மேலாண் இயக்குநர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மனுதாரரால் தெரிவிக்கப்பட்டு மேற்படி 03.05.2016 நாளிட்ட மனுதாரரது மனுவின் நகல் சமா்ப்பிக்கப்பட்டது. இப்பொருள் வருவாய்த் துறை சம்பந்தப்பட்டதென்பதாலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின்படி பரிசீலிக்கப்படவேண்டிய பொருளல்ல என்பதாலும் இதுகுறித்து பரிசீலித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரை கேட்டுக்கொள்ளப்படலாமென முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

7. 10.05.2016 அன்று மனுதாரருடன் திரு எஸ். கந்தவேல் என்பவரும் சாட்சியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை தாக்கல் செய்தார். சாலை ஒப்பந்தப் பணிகள் தரம் குறித்து நகராட்சி ஆணையரிடம் எழுத்து மூலமாக புகார்அளிக்காமல் வாய்மொழியாகவே புகார் அளிக்கப்பட்டதாகவும் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

8. மனுதாரர் ஏற்கெனவே உறுதி அளித்தவாறு வார்டு உறுப்பினரது சகோதரிக்கு ஒப்பந்தப் பணிகள் வழங்கப்படக்கூடாது என்பதற்கான நீதிமன்ற ஆணைகள் அல்லது ஆதாரபூர்வ ஆவணங்கள்/ஆணைகள் எதனையும் சமர்ப்பிக்கவில்லை. இருப்பினும் மனுதாரர் மற்றும் அவரது சாட்சிகளது வாக்குமூலங்களின் நகல்கள், நகராட்சி ஒப்பந்ததாரால் தரமற்ற முறையில் முடிக்கப்பட்ட பணிகள் எனக் குறிப்பிட்ட பட்டியல் நகல் ஆகியவை இம்முறை மன்ற நடுவ 18.05.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் பம்மல் நகராட்சி ஆணையருக்கு அனுப்பிவைக்கப்பட்டு கூடுதல் அறிக்கை தாக்கல் செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டது.

9. அதன்படி பம்மல் நகராட்சி ஆணையரது கூடுதல் விவர அறிக்கை ந.க.எண்.222/16/இ1, நாள்10.06.2016 அன்று வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறான சான்றுகள் வழங்கி உறுதி அளிக்கப்பட்டுள்ளது:-

i மனுதாரர் திரு. பி.கண்ணன் அவர்களால் தகவல் அறியும் உரிமை சட்டம், 2005ன் கீழ் நாளது தேதி வரை கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும் நகராட்சியால் உரிய விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ii மனுதாரர் குறிப்ட்டுள்ள ஒப்பந்ததாரர் திருமதி கே.வி.எஸ்.கவிதா மலர் என்பவர் இந்நகராட்சியில் 2008–2009 முதல் ஒப்பந்ததாரராக பதிவு செய்து ஒப்பந்த பணிகள் செய்து வருகின்றார்.

iii ஒப்பந்ததாரர்கள் மேற்கொண்டு வரும் பணிகள் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி நடைமுறைச்சட்டம், 1998ன் படி ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பீட்டுக்கு ஏற்றவாறு உள்ளூர், மாவட்ட மற்றும் மாநில செய்தி மலரில் வெளியிடப்படுவதினாலும் எந்த ஒப்பந்ததாரரும் பணி எடுக்க (ஒப்பந்தப்புள்ளி) முன்வரலாம் என்ற நடைமுறைப்படி மேற்படி ஒப்பந்ததாரர் பணியினை எடுத்து செய்து வருகின்றார்கள்.

iv அனைத்து ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளும் பணிகளுக்கு அளவு மற்றும் மேலளவுகள் எடுக்கப்பட்டு அதற்கான பொறியாளர்களால் சரிபார்க்கப்பட்ட பின்னரே (மதிப்பீட்டு தொகைக்கு ஏற்றவாறு நகராட்சி பொறியாளர், மண்டல செயற்பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் மற்றும் முதன்மை பொறியாளர்) பணிக்குண்டான தொகை வழங்கப்படுகிறது, மற்றும் அனைத்து ஒப்பந்தப் பணிகளுக்கும் பணியின் மொத்த மதிப்பு தொகையில் 5% பணிதரக்காப்பு தொகையாக பிடித்தம் செய்து நகராட்சியில் வைக்கப்படுகிறது. இத்தொகை சாலைப்பணி என்றால் ஒரு ஆண்டும் கட்டிட பணி என்றால் 6 மாத காலத்திற்கும், இப்பணிகளில் எவ்வித சேதாரமும் (Damage) இல்லாத பட்சத்தில் திரும்ப வழங்கவும், பழுது ஏற்படும் பட்சத்தில் ஒப்பந்ததாரர்களால் சரி செய்து கொடுக்கவும் தவறும் பட்சத்தில் துறையின் மூலமாக பழுது நீக்கம் பணி மேற்கொண்டு அதற்கான தொகையினை பிடித்தம் செய்து வைத்துள்ள தொகையில் ஈடுசெய்யப்படும்.

v புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் மீது நாளது தேதி வரை மனுதாரர் புகார் தவிர வேறு புகார் ஏதும் பெறப்படவில்லை.

vi மனுதாரர் பணி நடைபெறும்போது தெரிவித்த வாய்மொழி புகாரின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலரால் நேரில் சென்று மதிப்பீடுகளில் கண்டுள்ள அளவுகளின் படியும் தரத்தின்படியும் (Specification) பணி நடைபெற்றதை உறுதி செய்யப்பட்டது. மேலும் மனுதாரர் தனது புகாரில் ஒட்டுமொத்தமாக பணி தரமில்லை என்று தெரிவித்துள்ளது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. ஏனெனில் தற்போது மேற்படி சாலை நல்ல நிலையில் உள்ளது. இது சம்பந்தமான புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது.

vii மனுதாரர் நகர்மன்ற உறுப்பினர், ஒப்பந்ததாரரின் உறவினர் என்று தகவல் தெரிவித்ததின் பேரில் எந்தவகையிலும் உறவினர் என்று ஆதாரத்துடன் வழங்குமாறு கோரியதற்கு, மனுதாரர் எவ்வித விவரமும் நாளது தேதிவரை வழங்கவில்லை. எனவே, மனுதாரர் தனிப்பட்ட முறையில் உள்நோக்கத்துடன் எவ்வித அடிப்படை ஆதாரம் இல்லாமல் பணி தரமற்றுள்ளது என்று புகார் தெரிவித்துள்ளார்.

viii புகாரில் குறிப்பிட்டுள்ள சங்கர் நகர் காந்தி பிரதான சாலை 2012ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளதாக புகாரில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள அளவுகளின்படியும் தரத்தின்படியும் (Specification) பணி நடைபெற்றுள்ளது. ஒப்பந்த நிபந்தனைகளின்படியும் தொழில் நுட்ப ரீதியாகவும் மேற்படி பணியின் உத்தரவாதக்காலம் ஓராண்டு மட்டுமே. மேற்படி பணி நடைபெற்று மூன்றறை ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. எனவே, 2012ல் நடைபெற்ற பணிக்கு தற்போது நடைபெற்றுள்ளதென்று மனுதாரர் கூறும் புகார் அடிப்படை ஆதாரம் இல்லாதது என்பதுடன் தொழில்நுட்ப ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல.

ix மனுதாரர் குறிப்பிடும் சங்கர் நகர், 38வது தெரு சாலை அமைக்கும் பணி 26.02.2016 அன்று நடைபெற்றது. மனுதாரர் பணி நடைபெறும்போது தெரிவித்த வாய்மொழிபுகாரின் அடிப்படையில் பணி நடைபெற்றபோது சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப அலுவலரால் நேரில் சென்று மதிப்பீடுகளில் கண்டுள்ள அளவுகளின்படியும் தரத்தின்படியும் (Specification) பணி நடைபெற்றது உறுதி செய்யப்பட்டது. மேற்படி பணியில் 5% தொகையாக பணி தரக்காப்பு தொகை ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்து வைக்கப்பட்டுள்ளது. எனவே, ஏதேனும் பழுது ஏற்படின் விதிமுறைகளின்படி ஒப்பந்ததாரர் மூலம் பழுது சரி செய்யப்படும். தற்போது சாலை நல்லமுறையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது (புகைப்படம்) இணைக்கப்பட்டுள்ளது.

x பம்மல் நல்லதம்பி சாலை ஓராண்டிற்கு முன்பு போடப்பட்டதாக மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே, தொழில்நுட்ப ரீதியாகவும், ஒப்பந்த விதிமுறைகளின்படியும் புகார் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இருப்பினும், மேற்படி சாலை தற்போது நல்லமுறையில் பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ளது (புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது).

xi மனுதாரர் குறிப்பிடும் மலைக்குட்டை தண்ணீர் திருடி விற்கப்படும் புகார் வருவாய்த் துறை சம்பந்தப்பட்டது.

மேற்கண்டவாறு விசாரணைகள், வாக்குமூலங்கள், அறிக்கைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலித்ததில் மனுதாரரது முறையீடு மற்றும் குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால் இம்முறையீட்டினை தள்ளுபடி செய்து மேல் நடவடிக்கை கைவிடப்படலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

இருப்பினும், பத்தி 6–ல் குறிப்பிட்டுள்ள இம்முறைமன்ற நடுவத்தின் பரிசீலனைக்குட்படாத பொருள் குறித்து பொது நலன் கருதி தக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**2016 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.**

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1) திரு. பி. கண்ணன்,
த/பெ ஏ.வி. பாலசுப்ரமணியன்,
எண்.2, 40 வது தெரு, சங்கர் நகர்,
பம்மல், காஞ்சிபுரம், சென்னை –75.

2) நகராட்சி ஆணையர்,
பம்மல் நகராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை –75.

3) வட்டாட்சியர்,
தாம்பரம் வட்டாட்சியரகம்,
சென்னை.

4) மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியரகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

5) திரு. ஜெகந்நாதன்,
எண்.6, 17 வது தெரு,
சங்கர் நகர், பம்மல்,
காஞ்சிபுரம் மாவட்டம்.
சென்னை –75.